| வகுப்பு / பாடம் | 10 ம் வகுப்பு அறிவியல் -<br>15. நரம்பு மண்டலம் | அலகு | 15 |
|---|---|---|---|
| வினா வகை | சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக. | மதிப்பெண் | 12 |

**15. நரம்பு மண்டலம்**

**I சரியான விடையைத் தேர்ந்தெடு**

1. இருமுனை நியூரான்கள் காணப்படும் இடம்

அ) கண் விழித்திரை ஆ) பெருமூளைப் புறணி இ) வளர்கரு ஈ) சுவாச எபிதீலியம்

2. பார்த்தல் , கேட்டல் , நினைவுதிறன் , பேசுதல் , அறிவுக்கூர்மை மற்றும் சிந்தித்தல் ஆகிய செயல்களுக்கான இடத்தைக் கொண்டது.

அ) சிறுநீரகம் ஆ) காது இ) மூளை ஈ) நுரையீரல்

3. அனிச்சைச் செயலின் போது அனிச்சை வில்லை உருவாக்குபவை

அ) மூளை, தண்டுவடம், தசைகள் ஆ) உணர்வேற்பி, தசைகள், தண்டுவடம்

இ) தசைகள், உணர்வேற்பி, மூளை ஈ) உணர்வேற்பி, தண்டுவடம், தசைகள்

4. டென்ட்ரான்கள் செல் உடலத்தை ---------------- தூண்டலையும் , ஆக்சான்கள் செல் உடலத்திலிருந்து ---------------- தூண்டலையும் கடத்துகின்றன.

அ) வெளியே / வெளியே ஆ) நோக்கி / வெளியே இ) நோக்கி / நோக்கி ஈ) வெளியே/ நோக்கி

5. மூளை உறைகளுள் வெளிப்புறமாக காணப்படும் உறையின் பெயர்

அ) அரக்னாய்டு சவ்வு ஆ) பையா மேட்டர் இ) டியூரா மேட்டர் ஈ) மையலின் உறை

6. --------இணை மூளை நரம்புகளும் ------------ இணை தண்டுவட நரம்புகளும் காணப்படுகின்றன.

அ) 12, 31 ஆ) 31, 12 இ) 12, 13 ஈ) 12, 21

7. மைய நரம்பு மண்டலத்திலிருந்து தசை நார்களுக்குத் தூண்டல்களை கடத்தும் நியூரான்கள்

அ) உட்செல் நியூரான்கள் ஆ) கடத்து நரம்பு செல்கள்

இ) வெளிச்செல் நரம்பு செல்கள் ஈ) ஒரு முனை நியூரான்கள்

8. மூளையின் இருபுற பக்கவாட்டு கதுப்புகளையும் இணைக்கும் நரம்புப்பகுதி எது?

அ) தலாமஸ் ஆ) ஹைஹபோதலாமஸ் இ) பான்ஸ் ஈ) கார்பஸ் கலோசம்

9. ரேன்வீர் கணுக்கள் காணப்படும் இடம்

அ) தசைகள் ஆ) ஆக்சான்கள் இ) டெண்ட்ரைடுகள் ஈ) சைட்டான்

10. வாந்தியெடுத்தலைக் கட்டுப்படுத்தும் மையம்

அ) முகுளம் ஆ) வயிறு இ) மூளை ஈ) ஹைப்போதலாமஸ்

11. கீழுள்ளவற்றுள் நரம்புச் செல்களில் காணப்படாதது

அ) நியூரிலெம்மா ஆ) சார்கோலெம்மா இ) ஆக்ஸான் ஈ) டெண்டிரான்கள்

12. ஒருவர் விபத்தில் காரணமாக உடல் வெப்பநிலை , நீர்ச் சமநிலை மற்றும் பசி எடுத்தல் ஆகியவற்றுக்கான கட்டுப்பாட்டினை இழந்திருக்கிறார். அவருக்கு கீழுள்ளவற்றுள் மூளையின எப்பகுதி பாதிப்படைந்தால் இந்நிலை ஏற்பட்டுள்ளது?

அ) மூகுளம் ஆ) பெருமூளை இ) பான்ஸ் ஈ) ஹைபோதலாமஸ்

ஆக்கம் செ. பழனியப்பன் அறிவியல் பட்டதாரி ஆசிரியர் . அரசு உயர்நிலைப் பள்ளி, கொடியாலம்

LIVEWORKSHEETS